# ஸ்ரீ அருணாசல அக்ஷரமணமாலை

*பகவான் விரூபாக்ஷ குகையில் வாசம் செய்து கொண்டிருந்தபோது உடனிருந்த அடியார்கள், தாம் பிக்ஷை எடுக்க செல்லும்போது பாட ஒரு துதியை இயற்றி தரும்படி கேட்டபோது இதுபற்றி எந்த நினைப்பும் பகவானது மனதில் எழவில்லை. திருவருள்கூட, ஒருநாள் கிரிவலம் செய்யும்போது ஆங்காங்கே அமர்ந்து, தனக்கும் அருணாசலனுக்கும் இடையே ஏகாந்தத்தில் நிகழ்ந்த அதிசயத்தை பக்திப் பரவசத்துடன், கிரிவலம் செய்து முடிப்பதற்குள் 108 மந்திரங்கள் அடங்கியதான இந்நூலை எழுதியருளினார். இதற்கு பொருள் என்ன என்று ஸ்ரீ பகவானிடம் கேட்டபோது அதற்கு பொருள் அதைப் பாராயணம் செய்வதுதான் என்று கூறியருளியுள்ளார்.*

## பாயிரம்

மெய்யுணர்வை நாடி நின்ற மெய்யடியார் (அதற்குத் தடையான) தம் மனக்கலக்கந் தெளியும்படி அருணாசலனைத் துதித்து வழிபடற் பொருட்டாக ஆசாரிய ரமணன் (அவர் மாட்டுத் தனக்குண்டான) மகிழ்ச்சியாற் கூறியதான அக்ஷரமணமாலையையே தமக்குற்ற கதியாக நம்பி அருணாசலமென (மனத்தாலெண்ணி) அறிவோ டகத்தே யடங்குவோர் திருவருளாற் சிவனுல காளப் பெறுவர்.

## காப்பு

அருணாசல சிரேஷ்டனுக்கு (நாயகனுக்கு) ஏற்ற அக்ஷர மணமாலையை சாற்றுவதற்கு, கருணைக் கடலான கணபதியே! நீ எனக்குக் கைகொடுத்துக் காப்பாயே!

## நூல்

அருணா சலசிவ அருணா சலசிவ
அருணா சலசிவ அருணாசலா!
அருணா சலசிவ அருணா சலசிவ
அருணா சலசிவ அருணாசலா!

1. அருணாசலா! தம் மனத்தில், 'அருணாசலமே நான்' என்று அபேதமாகக் கருதும் அன்பர்தம் அகங்காரத்தை வேரோடு அறுப்பாய்.

2. அருணாசலா! அழகும் சுந்தரமும் சொல்லால் வேறாயினும் பொருளால் ஒன்றாயிருப்பது போலவே நானும் நீயும் உபாதியுணர்வால் வேறாயினும் உண்மையியல்பால் ஒன்றாயிருப்போம்.

ஸ்ரீ

# அருணாசல அக்ஷரமணமாலை

## பாயிரம்

### (விருத்தம்)

தருணா ருணமணி கிரணா வலிநிகர்
தரும க்ஷரமண மகிழ்மாலை
தெருணா டியதிரு வடியார் தெருமரல்
தெளியப் பரவுதல் பொருளாகக்
கருணா கரமுனி ரமணா ரியனுவ
கையினாற் சொலியது கதியாக
வருணா சலமென வகமே யறிவொடு
மாழ்வார் சிவனுல காள்வாரே.

— முருகனார்

## காப்பு

அருணாசல வரற்கேற்ற வக்ஷரமண மாலைசாற்றக்
கருணாகர கணபதியே கரமருளிக் காப்பாயே.

## நூல்

அருணா சலசிவ அருணா சலசிவ
அருணா சலசிவ அருணாசலா!
அருணா சலசிவ அருணா சலசிவ
அருணா சலசிவ அருணாசலா!

1. அருணா சலமென வகமே நினைப்பவ
ரகத்தைவே றறுப்பா யருணாசலா (அ)

2. அழகுசுந் தரம்போ லகமும் நீயுமுற்
றபின்னமா யிருப்போ மருணாசலா (அ)

3. அருணாசலா! என்னை என் மனையாகிய மனத்திற் புகுந்து பலாத்காரமா யிழுத்து, உன்னிருப்பாகிய இதயத்திற் சிறிதுந் தப்ப வொட்டாமல் நிலைபெறச் சிறைப்படுத்திக் கொண்ட நின்னருள் விசித்திரந்தான் என்னே!

4. அருணாசலா! எவர் பொருட்டால் என்னை நீ ஆட்கொண்டாய்? முன்னர் உவப்பாக ஆண்ட நீ பின்னர் உவர்ப்பாகக் கைவிடின் உலகோர் யாவரும் உன்னைப் பழி தூற்றுவர்.

5. இப்பழியினின்று உன்னை விடுவித்துக்கொள். என்னால் உன்னை ஏன் நினைக்கும்படி செய்தாய்? இனி யாரே உன்னைக் கை நழுவ விடுவார்?

6. அடியார்க்கு, அவரைப் பெற்று வளர்த்த நற்றாயினும் மிகப் பரிந்தருள் செய்வோய்! ஓ! இது நின் அருளுடைமையேயாம்.

7. என் ஆருயிர்க் குடையோனான உன்னை ஏமாற்றிவிட்டு அற்ப உடலுக்குரிய ஐம்புல விஷயங்களிற் பட்டிமாடுபோல் ஓடி உழலாதபடி என்னுளத்தின்மேல் உறுதியாக வீற்றிருந்தருள்.

8. வாசனை வசத்தால் ஊர்முழுதும் ஓயாது சுற்றும் உள்ளம், இடைவிடாது உன்னைக் கண்டு உன்னிடமே மீளாது ஒடுங்குற உன் பூரண சொரூப லாவண்யத்தை காட்டியருள்.

9. நான் பக்குவமடைந்த இப்பொழுதே என் அகங்காரக் கன்னிமையை அறவேயழித்து (உன்னோடிரண்டற) என்னைக் கலவாவிடில் இதுதானோ புருஷோத்தமனான உனக்குப் பௌருஷமாவது?

10. ஏனோ உனக்கிந்த மாயவுறக்கம்? பரபுருஷரான தூர்த்தர் என்னை துன்மார்க்கத்துக்கு இழுத்துச் செல்லவும் (அதனைக் கண்டுங் காணாதவன் போல் பாராமுகமாகச் சும்மாவிருக்கும்) இச்செயல் உன்னருளுக்கு அழகாமோ?

11. (என் பிறப்புரிமையாக இதயப் பெட்டகத்திலுள்ள ஆத்ம ரத்தினத்தை கவர்ந்து கொள்ள) ஐம்புலன்களாகிய கள்வர் என்னகத்தினிற் புகும்பொழுது அவ்வகத்தில் நீதான் இல்லாது போயினையோ?

12. உதயாஸ்தமன மற்று ஸதோதய ஞானசூரியனாய் ஸர்வஸாக்ஷித்வத்தால் ஒருவனான உன்னை, தம் வரவு காணவொட்டாமற் கண்ணைக் கட்டி மறைத்து எவரே உட்புக வல்லார்? (அவ்வாறு புகவல்லார் எவருமின்மையின்) அவர் அகம்புகல் உனது சூழ்ச்சியே யாகும்.

13. ஓங்காரப் பொருளாக ஒப்புயர்வற்று விளங்குவோய்! உன்னை யாரே உள்ளபடி அறிய வல்லார்?

14. தாய் தன்னியல்பாகவே தன் பிள்ளைக்கு அருளுமாறு போல உன்னை நாடியடைந்த எனக்குத் திருவருள் பாலித்து என்னை உரிமையாக்கிக் கொள்ளுதல் உன் கடமையாம்.

15. காண்பார்தங் கண்ணுக்குங் கண்ணாக நின்று கண்ணின்றியே சகலமுங் காணாமற் காண்போனான உன்னை எவர் காண்பது? நீயே என்னைக் கண்பார்.

3. அகம்புகுந் தீர்த்துன் னககுகை சிறையா
யமர்வித்த தென்கொ லருணாசலா (அ)

4. ஆருக் காவெனை யாண்டனை யகற்றிடி
லகிலம் பழித்திடு மருணாசலா (அ)

5. இப்பழி தப்புனை யேனினைப் பித்தா
யினியார் விடுவா ரருணாசலா (அ)

6. ஈன்றிடு மன்னையிற் பெரிதருள் புரிவோ
யிதுவோ வுனதரு ளருணாசலா (அ)

7. உனையே மாற்றி யோடா துளத்தின்மே
லுறுதியா யிருப்பா யருணாசலா (அ)

8. ஊர்சுற் றுளம்விடா துனைக்கண் டடங்கிட
வுன்னழ கைக்காட் டருணாசலா (அ)

9. எனையழித் திப்போ தெனைக்கல வாவிடி
லிதுவோ வாண்மை யருணாசலா (அ)

10. ஏனிந்த வுறக்க மெனைப்பிற ரிழுக்க
விதுவுனக் கழகோ வருணாசலா (அ)

11. ஐம்புலக் கள்வ ரகத்தினிற் புகும்போ
தகத்தினீ யிலையோ வருணாசலா (அ)

12. ஒருவனா முன்னை யொளித்தெவர் வருவா
ருன்சூ தேயிது வருணாசலா (அ)

13. ஓங்கா ரப்பொரு ளொப்புயர் வில்லோ
யுனையா ரறிவா ரருணாசலா (அ)

14. ஔவைபோ லெனக்குன் னருளைத் தந்தெனை
யாளுவ துன்கட னருணாசலா (அ)

15. கண்ணுக்குக் கண்ணாய்க் கண்ணின்றிக் காணுனைக்
காணுவ தெவர்பா ரருணாசலா (அ)

16. காந்தம் இரும்பைத் தன்பாற் கவர்வது போல நின் அருளாற்றலால் என்னை நின்பாற்கவர்ந்து, பின்னொருகாலும் நானுன்னைப் பிரிந்து விடாமல் என்னுள் கலந்து என்னோடு ஐக்கியமாயிருந்தருள்.

17. ஊனக் கண்ணுக்குக் கடினமான கல் மலை வடிவினதாகக் காணப்படினும் ஞானக் கண்ணுக்கு மிக்க மிருதுசுபாவமுள்ள கருணைக் கடலே! கருணைகூர்ந்து அருள்செய்.

18. கீழோர் மேலோர் இதயங்களில் ஒளிர்கின்ற அருணாசல சிவமணியே! இதயத்தில் விளங்கி என் அவிச்சையிருளை அழிவு செய்தருள்.

19. குற்றம் அறுத்து எனைக் குணமாய்ப் பணித்து ஆள்வாய், குரு உருவாய் ஒளிரும் அருணாசலா.

20. கூரிய வாளையும், நெருங்கிய கண்களை உடைத்தாகிப் பரந்த வலையையும் கைக்கொண்ட கயவரது சூழ்ச்சியில் நான் அகப்படாது கருணைகூர்ந்து என்னைக் கலந்தருள்.

21. கல்லுங் கசிந்துருக யானுன்னை எவ்வளவோ கெஞ்சியும் நீ ஒரு வஞ்சகன்போல் என்பாற் கொஞ்சமும் இரங்காதிருக்கின்றாய். இனியாகிலும் 'அஞ்சாதே' எனக் கூறி எனக்கு அபயமளித்தருள்.

22. கேளாமலே குறிப்பறிந்து கொடுத்தலால் உனக்குண்டான அழியாப் புகழை, என் மட்டிற் கேட்டுங் கொடாது ஒழித்தலால் இப்பொழுது நீ வீணே அழித்துக் கொள்ளாமல் என்பால் இரங்கியருள்.

23. என் கரதலத்திற் சேர்ந்த நின் சொரூபரச மதுவைப் பானம் பண்ணி அதனாலின்ப வெறி கொண்டு கிடக்க எனக்கருள் செய்.

24. கொடி கட்டினாற் போல முனைந்து நின்று அடியரைக் கொல்லாது கொல்கின்ற உன்னை சம்பந்தித்துக் கொண்டு எவ்வாறு உயிர்த்திருப்பேன்?

25. கோபமற்ற சாந்தகுணத்தோய்! நின்னருளுக்கிலக்காக இவ் வடியேனைத் தேர்ந்து கொள்ள ஜன்மாந்தரங்களில் யானென்ன தவஞ் செய்தேன்!

26. கௌதம முனியாற் போற்றப்பெற்ற கருணை மாமலையே! அவர்க்கு நல்லருள் செய்தாற்போல என் போற்றியையும் இனிதேற்று என்பால் நின் அருட்கண்ணோக்கஞ் சாத்தி என்னை ஆண்டருள்.

27. ஜீவனுக்கு உண்மைபோலத் தோன்றுகின்ற பிரபஞ்சமனைத்தும் தன்னருள் ஞானக் கதிரொளிக் கரங்களாற் கவர்ந்து விழுங்கும் அருணாசலா! ஆசா பாச வாசனைகள் குடிகொண்டுள்ள மனத்தாமரையை நன்றாக மலர்த்தியருள்.

28. எனக்குணவாக (உன்னைக் கருதி) யான் உன்னையடைந்து, அதற்கீடாக யானே உனக்குணவாய் (தன்மயமாக உண்டறுக்கப்பட்டு) முடிவுற்றொழிவேன்.

*16.* காந்த மிரும்புபோற் கவர்ந்தெனை விடாமற்
கலந்தெனோ டிருப்பா யருணாசலா (அ)

*17.* கிரியுரு வாகிய கிருபைக் கடலே
கிருபைகூர்ந் தருளுவா யருணாசலா (அ)

*18.* கீழ்மே லெங்குங் கிளரொளி மணியென்
கீழ்மையைப் பாழ்செய் யருணாசலா (அ)

*19.* குற்றமுற் றறுத்தெனைக் குணமாய்ப் பணித்தாள்
குருவுரு வாயொளி ரருணாசலா (அ)

*20.* கூர்வாட் கண்ணியர் கொடுமையிற் படாதருள்
கூர்ந்தெனைச் சேர்ந்தரு ளருணாசலா (அ)

*21.* கெஞ்சியும் வஞ்சியாய்க் கொஞ்சமு மிரங்கிலை
யஞ்சலென் றேயரு ளருணாசலா (அ)

*22.* கேளா தளிக்குமுன் கேடில் புகழைக்
கேடுசெய் யாதரு ளருணாசலா (அ)

*23.* கையினிற் கனியுன் மெய்ரசங் கொண்டுவ
கைவெறி கொளவரு ளருணாசலா (அ)

*24.* கொடியிட் டடியரைக் கொல்லுனைக் கட்டிக்
கொண்டெங்ஙன் வாழ்வே னருணாசலா (அ)

*25.* கோபமில் குணத்தோய் குறியா யெனைக்கொளக்
குறையென் செய்தே னருணாசலா (அ)

*26.* கௌதமர் போற்றுங் கருணைமா மலையே
கடைக்கணித் தாள்வா யருணாசலா (அ)

*27.* சகலமும் விழுங்குங் கதிரொளி யினமன
சலச மலர்த்தியி டருணாசலா (அ)

*28.* சாப்பா டுன்னைச் சார்ந்துண வாயான்
சாந்தமாய்ப் போவ னருணாசலா (அ)

29. அருள்மதியான அருணாசலா! தாபத்திரய சித்தம் சீதளமாக, உன் அமிர்த கிரணங்களான கரங்கள்கொண்டு, அகத்தே அமுதம் பொதிந்து ஆம்பலரும்பாகக் கூம்பிக் கிடக்கும் அதன்வாயைத் திறப்பித்தருள்.

30. என் மருளாடையைக் களைந்து என் சொரூபத்தை முற்ற வெளியாக்கி நின்னருளாடையை எனக்களித் தருள்.

31. என்னிதயம் இன்பக் கடலாகி ஆனந்தம் பொங்கவும், வாக்கும் மனமும் உள்ளொடுங்கவும் ஆங்கே அமைதியாகச் சும்மா வீற்றிருந்தருள்.

32. நீ இனிமேலும் என்னை வஞ்சித்துச் சோதியாமல், நின் யதார்த்த ஜோதி சொரூபத்தை எனக்கிப்பொழுதே துலக்கியருள்.

33. மாயவித்தையை உண்மையென்றே கருதி மயங்கும் இவ் வுலகமயக்க மொழிந்து, உய்யும் படியான ஸத்வித்தையை உணர்த்தியருள்.

34. என்னை நீ கலவாவிடின், உடம்பு நீராளமா உருகக் கண்ணீர் ஆறாகப் பெருக (அதே ஏக்கமாகக் துயரக் கடலில்) அமிழ்ந்துபட்டு அழிவேன்.

35. நீ என்னைச் சேராமற் சையென்று இகழ்ந்து தள்ளினால், முன் செய்த நின்ற தீவினை ஆங்கே என்னை அணுகிச் சுடுவதன்றி, எனக்கு உய்யுங்கதி வேறுயாதோ? நீயே அருள் செய்.

36. 'பேச்சறச் சும்மா இரு', என்று வாய் வார்த்தையாற் கூறாது மோன முத்திரையால் கூறி, (அதற்கேற்பவே நீயும்) பேச்சுமூச்சற்றுச் சும்மாவிருந்தாய்.

37. திரிகரணச் சேட்டைகள் இன்றி, சும்மா இருக்க தன்னியல்பால் அகத்தே துலங்கும் ஆன்மசுகத்தை அனுபவித்து அறிதுயில் கிடப்பின் அதனினும் வேறு கதியுளதோ கூறியருள்.

38. ஞானசூரனான அருணாசலா! நின்னருட் சௌரியங்காட்டினை; என் னவிச்சையிருள் அற்றொழிந்தது; நீயும் நின்னிலையில் அமைதியாய் அசைவற்றிருந்தாய்.

39. அறிவில் நாயினுங் கடையான நான் உன் அருள்வலி அல்லாத வேறெந்தவலி கொண்டு உன்னைத் தேடியடைய வல்லேன்.

40. உன்னை அடைதற்குரிய ஞானம் இல்லாமலே, ஆனால் உன்னை அடையவேண்டுமென்ற ஆசை மட்டும் கொண்டதனால் உண்டான தளர்ச்சி நீங்க, அந்த விசார ஞானத்தை எனக்குணர்த்தியருள்.

41. ஞான சூரியனான அருணாசலா! நீயும் கேவலம் ஒரு வண்டுபோல, '(உட்புக்கு நானுன்னைக் குடைந்து தோய்தற்கு) நீ இன்னும் மலரவில்லையே' (என்றொரு வியாஜம் மேலிட்டுக்கொண்டு) என்னெதிர் நிற்கின்றாய். இஃதென்ன மாயம்!

29. சித்தங் குளிரக்கதி ரத்தம்வைத் தமுதவா
யைத்திற வருண்மதி யருணாசலா (அ)

30. சீரை யழித்துநிர் வாணமாச் செய்தருட்
சீரை யளித்தரு ளருணாசலா (அ)

31. சுகக்கடல் பொங்கச் சொல்லுணர் வடங்கச்
சும்மா பொருந்திடங் கருணாசலா (அ)

32. சூதுசெய் தென்னைச் சோதியா தினியுன்
சோதி யுருக்காட் டருணாசலா (அ)

33. செப்படி வித்தைகற் றிப்படி மயக்குவிட்
டுருப்படு வித்தைகாட் டருணாசலா (அ)

34. சேரா யெனின்மெய் நீரா யுருகிக்கண்
ணீராற் றழிவே னருணாசலா (அ)

35. சையெனத் தள்ளிற் செய்வினை சுடுமலா
லுய்வகை யேதுரை யருணாசலா (அ)

36. சொல்லாது சொலிநீ சொல்லற நில்லென்று
சும்மா விருந்தா யருணாசலா (அ)

37. சோம்பியாய்ச் சும்மா சுகமுண் டுறங்கிடிற்
சொல்வே றென்கதி யருணாசலா (அ)

38. சௌரியங் காட்டினை சழக்கற்ற தென்றே
சலியா திருந்தா யருணாசலா (அ)

39. ஞமலியிற் கேடா நானென் னுறுதியா
ஞடிநின் னுறுவே னருணாசலா (அ)

40. ஞானமில் லாதுன் னாசையாற் றளர்வற
ஞானந் தெரித்தரு ளருணாசலா (அ)

41. ஞிமிறுபோ னீயு மலர்ந்திலை யென்றே
நேர்நின் றனையென் னருணாசலா (அ)

42. "அது நீ" (தத்துவமஸி) உண்மையை அறியாத என்னை அவ்வான்ம சொரூபத்தை அடையச் செய்தாய். நின்னருள் விலாசம்தான் என்னே!

43. தானே தானே தத்துவப் பொருளாமவன். தத்துவப் பொருளாகிய அந்தத் தானான நீயே இவ் வுண்மையை எனக்குக் கண்கூடாகக் காட்டியருள்.

44. வெளி விஷயங்களினின்று அகத்தே திரும்பி, அகமுகப் பார்வையால் தன்னைத் தானே இடைவிடாது ஆராய்ந்து காண்! தனக்குத் தானே நன்கு விளங்கும் என்று உபதேசித்தாய், இதுவென்னோ?

45. இழந்துவிட்ட ஆன்ம சொரூபமான உன்னை எல்லையற்ற இதயத்தின் கண்ணே தேடி உன் அருளாலே நான் திரும்ப அடைந்தேன்.

46. விசாரஞானம் அற்ற இப்பிறப்பால் எனக்கு யாது பயன்? அதனை மற்றெவ்வுயிர்ப் பிறப்போடாவது - உவமித்துரைக்க நான் வாயெடுப்பதேன்?

47. என் ஆண்டவனான அருணாசலா! மனம் பரிசுத்தமாகி யொழிந்த பக்குவிகளே கலக்கும் உன் சொரூபத்தை யானுங் கலக்கும்படி எனக்கருள் செய்.

48. நான் உன்னைக் காவற் கடவுளாகக் கருதி சரணாகதி அடைதலும் அவ்வாறடைந்த என்னைத் தானே (என் கருத்துக்கு நேர்மாறாக) ஒருங்கொழித்தாய்.

49. தேடாமலே எனக்கு வலிதிற் கிடைத்த நல்ல திருவருட் செல்வமே! என் மனமயக்கமாகிய வறுமையை மாற்றியருள்.

50. பிரயத்தனங் கொண்டு நின்னுண்மை சொரூபத்தை ஆராய்ந்தறியத் தலைப்பட்டு, அறிவாற்றல் கெட்டு நான் அழிந்தேன். (என் ஆணவப் பிழையைப் பொறுத்து, நின் சொரூபங் காண) எனக்கருள் செய்வாய்.

51. நின் அருட்கரத்தாற் தொட்டு (ஜீவபோதம் கெட்டு நின் அத்துவித சொரூபத்தோடு ஒன்ற) நீ என்னுடன் இரண்டறக் கலவாவிடின் - யான் பிறவிப்பயன் இழந்தொழிவேன். அவ்வாறு ஒழியாது அருள்செய்.

52. குற்றமற்ற நீ என்னோடு இரண்டறக் கலந்து, நின் கலவிப் பேரின்பம் யானென்றும் அனுபவிக்க அருள்செய்.

53. எளிமையால் நெஞ்சம் நைந்து நின்னைத் தஞ்சமாக அடைந்த என்னை எள்ளி நகையாடற்கு இது சமயமன்று. என்னைத் திருவருட் புன்னகை புரிந்து நீ பார்ப்பாயாக.

54. நின்னொடு சேர வந்து உன்னை நாடவும், முன்பு தானாகவே என்னை வலியவந்து ஆட்கொண்ட நீ சற்றும் நாணிலாயாகித் தூண்போல் அசைவற்று நின்றாய். (இது தானா நின் அருளுக்கும் பௌருஷத்துக்கும் அழகுடைமை?)

**42.** தத்துவந் தெரியா தத்தனை யுற்றாய்
தத்துவ மிதுவென் னருணாசலா (அ)

**43.** தானே தானே தத்துவ மிதனைத்
தானே காட்டுவா யருணாசலா (அ)

**44.** திரும்பி யகந்தனைத் தினமகக் கண்காண்
டெரியுமென் றனையென் னருணாசலா (அ)

**45.** தீரமி லகத்திற் றேடியுந் தனையான்
றிரும்பவுற் றேனரு ளருணாசலா (அ)

**46.** துப்பறி வில்லா விப்பிறப் பென்பய
னொப்பிட வாயே னருணாசலா (அ)

**47.** தூய்மன மொழியர் தோயுமுன் மெய்யகந்
தோயவே யருளென் னருணாசலா (அ)

**48.** தெய்வமென் றுன்னைச் சாரவே யென்னைச்
சேர வொழித்தா யருணாசலா (அ)

**49.** தேடா துற்றநற் றிருவரு ணிதியகத்
தியக்கந் தீர்த்தரு ளருணாசலா (அ)

**50.** தைரிய மோடுமுன் மெய்யக நாடயான்
றட்டழிந் தேனரு ளருணாசலா (அ)

**51.** தொட்டருட் கைமெய் கட்டிடா யெனிலியா
னட்டமா வேனரு ளருணாசலா (அ)

**52.** தோடமி னீயகத் தோடொன்றி யென்றுஞ்சந்
தோடமொன் றிடவரு ளருணாசலா (அ)

**53.** நகைக்கிட மிலைநின் னாடிய வெனையரு
ணகையிட்டுப் பார்நீ யருணாசலா (அ)

**54.** நாணிலை நாடிட நானா யொன்றிநீ
தாணுவா நின்றனை யருணாசலா (அ)

55. என்னை நின் சொரூப ஞானாக்கினியால் எரித்துத் தன்மயமாக நீறாக்குவதன் முன்பே (என்னிதயங் குளிர்ந்து நான் அதைத் தாங்க வல்லேனாக) நின்னருள் மழை என்பாற் பொழிந்தருள்.

56. நீ நான் (என்னும் பேத புத்தி) கெட்டு ஒழிய என்னை இறுகத்தழுவி, நான் பேரின்பவடிவாக நிற்கும் நிலையை நீ எனக்கருள் செய்.

57. நுண்ணுருவான விண்ணுருவுடைய உன்னை என்னிதயத்தில் நான் சேரத் தடையாக உள்ள எண்ணவலைகள் உன்னருளால் என்று அழியுமோ?

58. கல்வியறிவு அற்ற மூடனான என் மயக்க அறிவைக் கெடுத்து நின் மெய்யுணர்வை என்னுள்ளத்து விளக்கியருள்.

59. உன்னருளுக்குக் குழைந்துகுழைந்து உடலும் உள்ளமும் அன்பால் உருகியுருகி நான் உன்னைச் சரண் புகுதலும், நிருவாணியாக - நீதான் நிமிர்ந்து நின்றாய்! என்ன ஆச்சரியம்!

60. நின்பால் ஆசையற்ற எனக்கு நின் ஆசையை முதலிற் காட்டி, அவ்வாசையை என்பால் உண்டாக்கின நீயே மோசஞ் செய்து விடாமல் அதனை பூர்த்தி செய்வித்தருள்.

61. பதங்கெட்டழிந்த கனியை உண்டலாற் பயனில்லை. (எனவே, கனிபோல்வாளாய் நின்னைக் காதலித்த கன்னியான எனது) இன்ப நலத்தை ஏற்று பதமான இப்பொழுதே என்னை நாடி இனிது நுகர்ந்தருள்.

62. நான் வருந்தாமலே, உன்னை எனக்களித்து அதற்கீடாக என்னைக் கொண்டாய் அன்றோ? ஆதலால் எனக்கு நீ எமனானாய்.

63. (சத்திநிபாத முண்டாக, என்னை) நோக்கியும் கருதியும் ஸ்பரிசம் செய்தும் பக்குவப்படுத்தி நின்றிருவடிக்காளாக என்னை நீ இனிதே ஆண்டருள்.

64. மாயா (சர்ப்ப) விஷந் தீண்டித் தலைக்கேறிச் சாவதன் முன் யான் உன் அருளமுதுண்டு வாழ எனக்கருள் செய்.

65. என் மன மாயை கெட என்னைக் கடைக்கணியாவிடில், இவ்வுலகில் (என் பொருட்டுப் பரிந்து) உனக்கெடுத்துக் கூறுவார் யாவருளர்?

66. பிறவித்துன்பப் பித்து விட்டொழிய, நின் சுத்தான்ம சொரூபத்தை பெற வேண்டும் என்னும் பித்துக் கொள்ளி யாக்கினை. அப் பித்தம் தெளியும் மருந்தையும் நீயே எனக்குப் பிரசாதித்தருள்.

67. நிர்ப்பயனான உன்னை நிர்ப்பயமாகச் சேரத் துணிந்த என்னைச் சேர உனக்கேனோ பயம்?

55. நின்னெரி யெரித்தெனை நீறாக் கிடுமுன்
னின்னருண் மழைபொழி யருணாசலா (அ)

56. நீநா னறப்புலி நிதங்களி மயமா
நின்றிடு நிலையரு ளருணாசலா (அ)

57. நுண்ணுரு வுனையான் விண்ணுரு நண்ணிட
வெண்ணலை யிறுமென் றருணாசலா (அ)

58. நூலறி வறியாப் பேதைய னென்றன்
மாலறி வறுத்தரு ளருணாசலா (அ)

59. நெக்குநெக் குருகியான் புக்கிட வுனைப்புக
னக்கனா நின்றனை யருணாசலா (அ)

60. நேசமி லெனக்குன் னாசையைக் காட்டிநீ
மோசஞ் செயாதரு ளருணாசலா (அ)

61. நைந்தழி கனியா னலனிலை பதத்தி
னாடியுட் கொள்நல மருணாசலா (அ)

62. நொந்திடா துன்றனைத் தந்தெனைக் கொண்டிலை
யந்தக னீயெனக் கருணாசலா (அ)

63. நோக்கியே கருதிமெய் தாக்கியே பக்குவ
மாக்கிநீ யாண்டரு ளருணாசலா (அ)

64. பற்றிமால் விடந்தலை யுற்றிறு முனமருள்
பற்றிட வருள்புரி யருணாசலா (அ)

65. பார்த்தருண் மாலறப் பார்த்திலை யெனினருள்
பாருனக் கார்சொல்வ ரருணாசலா (அ)

66. பித்துவிட் டுனைநேர் பித்தனாக் கினையருள்
பித்தந் தெளிமருந் தருணாசலா (அ)

67. பீதியி லுனைச்சார் பீதியி லெனைச்சேர்
பீதியுன் றனக்கே னருணாசலா (அ)

68. புன்மையான பொய்யுணர்வு எது? நன்மையான மெய்யுணர்வு எது என்று கூறு. அம் மெய்யுணர்வை நான் அடைதற்கு அருள்செய்.

69. பிரபஞ்ச வாசனையுற்ற என்னுள்ளம் (அது நீங்கி) நிஷ்பிரபஞ்சமான பிரம்மவாசனையுறப் பிரம்மத்தில் ஐக்கிய ஞானம் எனக்கருள்செய்.

70. அருணாசலமென்று உன் பெயரை நினைத்த மாத்திரத்தில் என்னை அருட்கயிற்றால் பற்றி இழுத்துக் கொண்டாய். உன்னருட் பெருமையை யாவரே அறிய வல்லார்?

71. அகந்தைப் பேய் என்னைப் விட்டொழிய பெரும் பிரம்மப் பேயாகப் பிடித்து என்னைப் பேயனாக்கி விட்டாயே. இதுவென்னோ!

72. கொழுகொம்பின்றித் துவண்டு வாடும் பச்சிளங் கொடிபோல் துணையின்றி யலமராமல் என்னை ஆதரவாய்க் காத்தருள்.

73. பொடிபோட்டு மயக்கினாற்போல் என்னை மயக்கி, எனது ஜீவபோதத்தை அபகரித்து, உனது சிவ போதத்தை எனக்கு விளக்கினை.

74. போக்குவரவு இல்லாத இதயப் பரவெளியின் கண்ணே, (தன்னை நினைந்தவர்தம் வாசனைகளை அழித்துத்) திருவருட் சக்தி செய்யும் போராட்டத்தை காண்பித்தருள்.

75. பௌதிகமான உடற்பற்று ஒழிந்து இணை இன்றாக உயர்ந்த நின் சொரூபக் காட்சியை யான் என்றும் கண்டிருக்க எனக்கருள் செய்.

76. பிறவிப்பிணி மருத்துவனான நீ அதற்குக் காரணமான மலைப்பை மாற்றும் மருந்தை எனக்குப் பரிந்தளித்த பின்னும் நான் மலைக்கக் கடவேனோ? மலை வடிவான அருள்ஞான சஞ்சீவியாகத் இருந்தொளிரும் அருணாசலா!

77. அன்பாலடைந்த அடியாருடைய மதியை அழித்து, வெளிப் பார்வையில் அபிமானமின்றி உதாசீனம் போலத் தோன்ற, அவருள்ளத்திற் தன்மயமாகப் பின்பு சும்மா இருந்தொளிர்கின்ற அருணாசலா!

78. நான் பிறர் மிஞ்சிடிற் கெஞ்சிடும் கொஞ்ச அறிவினன் ஆதலால் நீ அதன் பொருட்டு என்னை வஞ்சியாதருள் செய்.

79. நடத்தும் மாலுமி இன்றிச் சண்டமாருதத்தில் அகப்பட்டுக் தவிக்கும் மரக்கலம் போல, மகாமாயையில் அகப்பட்டுப் பேதையான நான் கலங்கி வருந்தாதபடி என்னைக் காத்தருள்.

80. அடிமுடி காணமுடியாமல் அவ்வளவு சிக்கலான அகந்தை முடிச்சை நீயே விடுவிப்பாயாகி, எனக்கு அன்னைபோலருள் சுரந்தருள்.

68. புல்லறி வேதுரை நல்லறி வேதுரை
புல்லிட வேயரு ளருணசலா (அ)

69. பூமண மாமனம் பூரண மணங்கொளப்
பூரண மணமரு ளருணசலா (அ)

70. பெயர்நினைத் திடவே பிடித்திழுத் தனையுன்
பெருமையா ரறிவா ரருணசலா (அ)

71. பேய்த்தனம் விடவிடாப் பேயாப் பிடித்தெனைப்
பேயனாக் கினையென் னருணசலா (அ)

72. பைங்கொடி யாநான் பற்றின்றி வாடாமற்
பற்றுக்கோ டாய்க்கா வருணசலா (அ)

73. பொடியான் மயக்கியென் போதத்தைப் பறித்துன்
போதத்தைக் காட்டினை யருணசலா (அ)

74. போக்கும் வரவுமில் பொதுவெளி யினிலருட்
போராட் டங்காட் டருணசலா (அ)

75. பௌதிக மாமுடற் பற்றற்று நாளுமுன்
பவிசுகண் டுறவரு ளருணசலா (அ)

76. மலைமருந் திடநீ மலைத்திட வோவருண்
மலைமருந் தாயொளி ரருணசலா (அ)

77. மானங்கொண் டுறுபவர் மானத்தை யழித்தபி
மானமில் லாதொளி ரருணசலா (அ)

78. மிஞ்சிடிற் கெஞ்சிடுங் கொஞ்ச வறிவனியான்
வஞ்சியா தருளெனை யருணசலா (அ)

79. மீகாம னில்லாமன் மாகாற் றலைகல
மாகாமற் காத்தரு ளருணசலா (அ)

80. முடியடி காணா முடிவிடுத் தனைநேர்
முடிவிடக் கடனிலை யருணசலா (அ)

81. (நீ என் விஷயத்தில்) மூக்கறையன் முன் காட்டப்படும் முகக் கண்ணாடியாக அல்லாமல் என்னைத் தூக்கி உன்னோடு அணைந்துகொள்.

82. உடலென்னும் அகத்தில் மிருதுவான உளமென்னும் மலரணைக்கண் யாம் உண்மையிற் கலக்க எனக்கருள் செய்.

83. மேன்மேலுந் தாழ நடக்கும் எளியரைக் கூடி, (அக் கூட்டுறவால் அவர்போல நீயும் தாழ்வடைதற்கு மாறாக) உயர்வடைந்தாயே. இஃதென்ன ஆச்சரியம்!

84. மையிருள் போன்ற மனமயக்கத்தை மாற்றித் திருவருளென்னும் வசியாஞ்சனத்தால், அம் மனத்தை, உன் பரமார்த்த சொரூபத்துக்கு வசமாக்கிக் கொண்டனை.

85. யான் எனது, என்னும் இருவகைப் பற்றுக்களும் இதயத்தினின்று நிர்மூலமாகச் செய்து, இதயப் பரவெளியின்கண் நீ இன்ப நடஞ் செய்தாய். என்ன ஆச்சரியம்!

86. உலகின்பாலுள்ள மோகத்தை ஒழித்து உன்னிடத்து மோகமுள்ளோனாக வைத்துப் பின் அந்த மோகத்தையும் உன் சொரூபானுபவப் பிரசாதத்தால் இன்னும் ஒழியாது இருக்கின்றாய்.

87. வாய்மட்டும் பேசாதவனாய்க் கல்போலச் சும்மாக் கிடந்தால் அத்தகைய காஷ்ட மௌனமே ஒருவற்கு உண்மையான மௌனநிலை யாமோ?

88. விஷயங்களைப் புஜித்து நானுமொரு ஜீவனாகக் களித்து வாழ்ந்து வந்த என்வாயில் மண்ணை அள்ளிப் போட்டு என் சுகஜீவியத்தை ஒழித்தது உன்னை அன்றி வேறு யாவன்?

89. யாரும் அறியாமலே என்னறிவை மருளவத்தை அடைவித்துத் தன்மயமாகக் கொள்ளை கொண்டு ஒழிந்தது உன்னைத் தவிர்த்து வேறு யார்?

90. நீ ஆத்மாராமனாக இதயத்தில் என்னை ரமிப்பிக்கும் பதியென்று உரிமை பாராட்டி யான் இவ்வாறெல்லாங் கூறினேன். அதனால் கோபங் கொள்ளாமல் நீ என்னை ரமிப்பிக்க வாராய்.

91. இராப்பகலற்று விளங்கும் அருட்பரவெளியான இதயவீட்டில் (யாமிருவரும் இரண்டறக் கலந்து) இன்புற்றிருப்போம், வாராய்.

92. உன்பாலுள்ள அதிதீக்ஷ்ணமான அருளஸ்திரத்தை என்பால் இலக்காக எய்து என்னை உயிரோடு உண்டொழித்தாய் (உயிருண்ணியான நீ).

93. அடைந்தார்க்குப் பரம லாபமான நீ இகபர லாபம் இரண்டும் கெட்ட என்னைப் ஏற்றதால் என்ன லாபம் பெற்றாய்?

81. மூக்கிலன் முன்காட்டு முகுரமா காதெனைத்
தூக்கி யணைந்தரு ளருணாசலா (அ)

82. மெய்யகத் தின்மன மென்மல ரணையினு
மெய்கலந் திடவரு ளருணாசலா (அ)

83. மேன்மேற் றாழ்ந்திடு மெல்லியர்ச் சேர்ந்துநீ
மேன்மையுற் றனையென் னருணாசலா (அ)

84. மைமய நீத்தருண் மையினு லுனதுண்
மைவச மாக்கினை யருணாசலா (அ)

85. மொட்டை யடித்தெனை வெட்ட வெளியினீ
நட்டமா டினையென் னருணாசலா (அ)

86. மோகந் தவிர்த்துன் மோகமா வைத்துமென்
மோகந்தீ ராயென் னருணாசலா (அ)

87. மௌனியாய்க் கற்போன் மலரா திருந்தான்
மௌனமி தாமோ வருணாசலா (அ)

88. யவனென் வாயின் மண்ணினை யட்டி
யென்பிழைப் பொழித்த தருணாசலா (அ)

89. யாருமறி யாதென் மதியினை மருட்டி
யெவர்கொளை கொண்ட தருணாசலா (அ)

90. ரமணனென் றுரைத்தேன் ரோசங் கொளாதெனை
ரமித்திடச் செயவா வருணாசலா (அ)

91. ராப்பக லில்லா வெறுவெளி வீட்டில்
ரமித்திடு வோம்வா வருணாசலா (அ)

92. லட்சியம் வைத்தரு ளஸ்திரம் விட்டெனைப்
பட்சித்தாய் பிராணனோ டருணாசலா (அ)

93. லாபநீ யிகபர லாபமி லெனையுற்று
லாபமென் னுற்றனை யருணாசலா (அ)

94. நின்பால் என்னை வரவழைத்தாய் அன்றோ? நீயே என் யோக க்ஷேம பாரம் முழுதும் வகித்தருள். அது மிகக் கஷ்டமான காரியமாயிற்றே எனின் அது நினக்குத் தலைவிதியாம்.

95. நின்னோடு என்னையும் உடனழைத்து இதயவீட்டிற் புக்கு நின் சொரூப ஸாக்ஷாத்காரத்தை அருளிய ஞான்றே, வியக்தித்வ ஜீவபோத வாழ்வை யான் இழந்தொழிந்தேன். அது நின் அருண்மாட்சி யாம்.

96. யானுன்னைப் பற்றாதொழியின் மீட்டும் பிறவித்துன்பத்துக் கேதுவாமாகலான் (இறுதிக் காலத்தில்) யானுன்னை மறந்தொழியாது சொரூபத் தியானபர னாகவே உயிர்விடுவேனாக.

97. (உன தருட்கயிற்றால்) வீட்டினின்று என்னை வெளியே இழுத்து இதய வீட்டில் புகுந்து, சற்றே மெதுப்பட அதுவே நிரந்தரமான நின் உண்மைவீடாக உன் திருவருளாள் எனக்குக் காண்பித்தாய்.

98. நின் கள்ளச் செயல்களை இத்துதிமாலை வாயிலாகப் பலர் அறிய வெளியிற் பரப்பினேன் என்று வெறுத் தொழியாது நின் கைவல்ய முத்தியிற் கூட்டி என்னை காத்தருள்.

99. வேதாந்தத்தாலே தன்னினு மன்னியமற விளங்கும் சற்போதப் பொருளை இதயத்தில் எனக் கனுபவமாக விளக்கியருள்.

100. என் இகழ்ந்துரையைப் புகழ்ந்துரையாகத் திருவுளம் பற்றி, திருவருட் குடியாக வைத்து, என்னை என்றுங் கைவிடாமல் இனிது காத்தருள்.

101. தண்ணீரில் ஆலங்கட்டி அத் தண்ணீர் மயமாகக் கரைவது போலநின் அன்புருவான சொரூபத்தில் நானும் அவ் வன்புருவான தன்மயமேயாய் உன்னோடு ஒன்றாகக் கலக்க கரைவித்துக் கொண்டருள்.

102. அருணாசலமென்று நினைத்த மாத்திரத்தில் உன் அருள்வலையில் அகப்பட்டுக் கொண்டேன்; உன்னருள்வலை அச்செயலிற் சிறிதுந் தவறுவதாமோ?

103. ‘இவன் இதனுள் அகப்படட்டும்’ என உன் அருள்வலையைச் சிலந்தி போலப் பரக்கக்கட்டி, புறத்தே தப்பிப் போகாதபடி சிறைப்படுத்தி, என்னைத் தன்மயமாக உண்டொழித்தாய்.

104. அருணாசலத் திருநாமம் செவிகுளிரக் கேட்டு அகமகிழும் அன்பர்தம் அன்பருக்கு நின்னடியேன் அன்பனாக நீ எனக்கருள் செய்.

105. என்போன்ற எளியர் யாவரையும் என்றென்றுங் காவா நின்று நீயும் என்றென்றும் வாழ்ந்தருள்.

106. அன்பால் என்புருகும் ஆன்றோர் மதுரவாசகம் மடுத்த நினது திருச்செவி அன்பிலா அடியேனாகிய எனது அற்ப வாசகமும் செவிமடுக்கத் திருவுள்ள மிசைந்தருள்.

94. வரும்படி சொலிலை வந்தென் படியள
வருந்திடுன் றலைவிதி யருணாசலா (அ)

95. வாவென் றகம்புக்குன் வாழ்வரு ளன்றேயென்
வாழ்விழந் தேனரு ளருணாசலா (அ)

96. விட்டிடிற் கட்டமாம் விட்டிடா துனையுயிர்
விட்டிட வருள்புரி யருணாசலா (அ)

97. வீடுவிட் டீர்த்துள வீடுபுக்குப் பையவுன்
வீடுகாட் டினையரு ளருணாசலா (அ)

98. வெளிவிட்டே னுன்செயல் வெறுத்திடா துன்னருள்
வெளிவிட் டெனைக்கா வருணாசலா (அ)

99. வேதாந் தத்தே வேறற விளங்கும்
வேதப் பொருளரு ளருணாசலா (அ)

100. வைதலை வாழ்த்தா வைத்தருட் குடியா
வைத்தெனை விடாதரு ளருணாசலா (அ)

101. அம்புவி லாலிபோ லன்புரு வுனிலெனை
யன்பாக் கரைத்தரு ளருணாசலா (அ)

102. அருணையென் றெண்ணயா னருட்கண்ணி பட்டேனுன்
னருள்வலை தப்புமோ வருணாசலா (அ)

103. சிந்தித் தருட்படச் சிலந்திபோற் கட்டிச்
சிறையிட் டுண்டனை யருணாசலா (அ)

104. அன்பொடுன் னாமங்கே ளன்பர்த மன்பருக்
கன்பனா யிடவரு ளருணாசலா (அ)

105. என்போலுந் தீனரை யின்புறக் காத்துநீ
யெந்நாளும் வாழ்ந்தரு ளருணாசலா (அ)

106. என்புரு கன்பர்த மின்சொற்கொள் செவியுமென்
புன்மொழி கொளவரு ளருணாசலா (அ)

107. பொறுமை வடிவான மலையே! அடியேன் புகன்ற புன் சொல்லைப் பொறுத்து அதுவே உனக்குகந்த நன்சொல்லாகத் திருவுள்ளம் பற்றியருள். மற்று, நின்னிச்சையே நிகழ்வதாக.

108. நின்பால் உண்மைக் காதற்பெருக்கை நீ எனக்குதவி, அருணாசலரமண! எனது கையுறையான இம்மாலையை ஏற்றணிந்தருள்.

அருணா சலசிவ அருணா சலசிவ
அருணா சலசிவ அருணாசலா!
அருணா சலசிவ அருணா சலசிவ
அருணா சலசிவ அருணாசலா!

அருணாசலம் வாழ்க அன்பர்களும் வாழ்க

அக்ஷர மணமாலை வாழ்க.

*107.* பொறுமையாம் பூதர புன்சொலை நன்சொலாப்
பொறுத்தரு ளிஷ்டம்பின் னருணாசலா (அ)

*108.* மாலை யளித்தரு ணாசல ரமணவென்
மாலை யணிந்தரு ளருணாசலா (அ)

அருணா சலசிவ அருணா சலசிவ
அருணா சலசிவ அருணாசலா!
அருணா சலசிவ அருணா சலசிவ
அருணா சலசிவ அருணாசலா!

**அருணா சலம்வாழி யன்பர் களும்வாழி**
**அக்ஷர மணமாலை வாழி.**